***கவனிக்க.**-2020.10.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2197 - 2020 ඔක්තෝබර් මස 09 වැනි සිකුරාදා - 2020.10.09**

*2197 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி III - காணிகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 186 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2020, ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்காணி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

185 - B 082066 - 353 (2020/10)

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:
4/10/வ/கு/கல்/01/(2019) அமா.நிர்.

**முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

குருநாகல் மாவட்டம், கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 60, மஹல்கமுவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கனஹன்கொட்டுவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் பளுகஹஹேன காணியில் வசிக்கின்ற இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் விபரிக்கப்பட்டுள்ள 18 நபர்கள் குறித்த அரச காணியை வதிவிட நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தறுமாறு கேட்டு விண்ணப்பித்துள்ளார்கள் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2007.07.12 ஆந் திகதி தொடக்கம் 2037.07.11 ஆந் திகதி வரையிலும் 30 வருடங்கள்) ;

**வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய மாண்புமிகு அமைச்சின் அனுமதி வழங்கிய 2007 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

*தவணைப்பணம்*.- வருடாந்தக் குத்தகைப் பணத்தின் மும்மடங்கு தொகை தவணைப் பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது.

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்.

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2007.07.12 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவுபெறும் வரையிலும் இக்காணியைக் குத்தகைக்குப் பெற்றுக்கொண்டுள்ள காரணத்தைப் பூர்த்திசெய்யும் நோக்குடன் குடும்பத்தினுள் கீழ் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்வதற்கு மட்டும் அனுமதிக்கப்படும். இதற்கான அளிப்புப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான தகைமை குத்தகை முறி வழங்கப்பட்டு 2007.07.12 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்களின் பின்பு அல்லது குத்தகை முறி வழங்கப்படாவிட்டால் 2007.07.12 ஆந் திகதியிலிருந்து 10 வருடங்களின் பின்பு கிடைக்கும்.

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

(ஐ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பாராதீனப்படுத்தப்படும் போது குறிக்கப்படுகின்ற காலவரையறைக்குள் வீட்டு வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டி இருப்பதுடன் அவ்வாறு பூரணப்படுத்தப்படாத போது நீண்டகாலக் குத்தகை இரத்துச் செய்யப்பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும்.

இணைப்பு

| தொடர் இல. | காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம் | கோவையில் உள்ள பெயர் | வரைபட/ சுவடு வரைபட இலக்கம் | காணித் துண்டு இல. | காணியின் பரப்பளவு | எல்லைகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | வடக்கு | கிழக்கு | தெற்கு | மேற்கு |
| 01 | 4/10/57550 | திரு. கொடிகார ஆரச்சிலாகே சோமரத்ன | எப்.வீ.பி. 3201 இல் துண்டு பிரிக்கும் வரைபடம் 98/332 | O | 20.16 பேர்ச்சஸ் | காணித் துண்டு இல. L | காணித் துண்டு இல. N | உள்ளிடும் பாதை | காணித் துண்டு இல. P |
| 02 | 4/10/57543 | திரு. திசாநாயக்க முதியன்சேலகே பேமசிரி | எப். வீ. பி. 3201 இல் துண்டு பிரிக்கும் வரைபடம் 98/332 | C1 | 20.52 பேர்ச்சஸ் | உள்ளிடும் பாதை | நீர்ப்பாசனத் திணைக்களத் தின் காணி | D1 துண்டு | B1 துண்டு |
| 03 | 4/10/57541 | திரு. வன்னிநாயக முதியன்சேலாகே வருண பண்டார | எப்.வீ.பி. 3201 இல் துண்டு பிரிக்கும் வரைபடம் 98/332 | X | 20.16 பேர்ச்சஸ் | காணித் துண்டு இல. S | காணித் துண்டு இல. W | உள்ளிடும் பாதை | காணித் துண்டு இல. Y |
| 04 | 4/10/57542 | திரு. ஜயசிங்க முதியன்சேலாகே உபாலி ஜயசிங்க | எப்.வீ.பி. 3201 இல் துண்டு பிரிக்கும் வரைபடம் 98/332 | T | 20.16 பேர்ச்சஸ் | உள்ளிடும் பாதை | காணித் துண்டு இல. U | காணித் துண்டு இல. W | காணித் துண்டு இல. S |
| 05 | 4/10/57554 | திரு. ஹேரத் முதியன்சேலாகே இலங்காரத்ன | எப்.வீ.பி. 3201 இல் துண்டு பிரிக்கும் வரைபடம் 98/332 | H | 20.16 பேர்ச்சஸ் | காணித் துண்டு இல. C | காணித் துண்டு இல. G | உள்ளிடும் பாதை | காணித் துண்டு இல. I |
| 06 | 4/10/57556 | திரு. விஜேகோன் முதியன்சேலாகே சிரில் ஆரியதாச | எப்.வீ.பி. 3201 இல் துண்டு பிரிக்கும் வரைபடம் 98/332 | F | 20.16 பேர்ச்சஸ் | காணித் துண்டு இல. E | நீர்ப்பாசனத் திணைக்களத் தின் காணி | உள்ளிடும் பாதை | காணித் துண்டு இல. G |
| 07 | 4/10/57535 | திரு. ரத்நாயக்க முதியன்சேலாகே சுதுபண்டா ரத்நாயக | எப்.வீ.பி. 3201 இல் துண்டு பிரிக்கும் வரைபடம் 98/332 | G1 | 20.16 பேர்ச்சஸ் | காணித் துண்டு இல. E | காணித் துண்டு இல. F1 | உள்ளிடும் பாதை | பாதை |
| 08 | 4/10/57540 | திரு. நிசங்க ஆரச்சிலகே மஞ்சுள நிஷான்த அரவிந்த | எப்.வீ.பி. 3201 இல் துண்டு பிரிக்கும் வரைபடம் 98/332 | F1 | 20.16 பேர்ச்சஸ் | காணித் துண்டு இல. A1 | காணித் துண்டு இல. E1 | உள்ளிடும் பாதை | காணித் துண்டு இல. G1 |

| தொடர் இல. | காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம் | கோவையில் உள்ள பெயர் | வரைபட/ சுவடு வரைபட இலக்கம் | காணித் துண்டு இல. | காணியின் பரப்பளவு | எல்லைகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 09 | 4/10/57539 | திரு. எதிரிசிங்கசே நிரோஷ சஞ்சீவ அபேசிங்க | எப்.வீ.பி. 3201 இல் துண்டு பிரிக்கும் வரைபடம் 98/332 | R | 20.16 பேர்ச்சஸ் | உள்ளிடும் பாதை | காணித் துண்டு இல. S | காணித் துண்டு இல. Y | உள்ளிடும் பாதை |
| 10 | 4/10/57545 | திரு. மன்னலாகே ரஞ்சித் சமரநாயக | எப்.வீ.பி. 3201 இல் துண்டு பிரிக்கும் வரைபடம் 98/332 | I | 20.16 பேர்ச்சஸ் | காணித் துண்டு இல. B | காணித் துண்டு இல. H | உள்ளிடும் பாதை | உள்ளிடும் பாதை |
| 11 | 4/10/57544 | திரு. சமரகோன் முதியன்சலாகே பிரேமதிலக | எப்.வீ.பி. 3201 இல் துண்டு பிரிக்கும் வரைபடம் 98/332 | E | 25.69 பேர்ச்சஸ் | குளக் கரை | நீர்ப்பாசனத் திணைக்களத் தின் காணி | காணித் துண்டு இல. F | காணித் துண்டு இல. D |
| 12 | 4/10/57538 | திரு. உபாலி ரஞ்சித் சிரிமான்ன | எப்.வீ.பி. 3201 இல் துண்டு பிரிக்கும் வரைபடம் 98/332 | J1 | 20.16 பேர்ச்சஸ் | உள்ளிடும் பாதை | காணித் துண்டு இல. K1 | வனசீவித் திணைக் களக் காணி | காணித் துண்டு இல. I1 |
| 13 | 4/10/57536 | திரு. தென்னக்கோன் முதியன்சேலாகே பிரேமதிலக பண்டார | எப்.வீ.பி. 3201 இல் துண்டு பிரிக்கும் வரைபடம் 98/332 | K | 20.16 பேர்ச்சஸ் | உள்ளிடும் பாதை | காணித் துண்டு இல. L | காணித் துண்டு இல. P | காணித் துண்டு இல. J |
| 14 | 4/10/57546 | திருமதி ஹேரத் முதியன்சேலாகே ராஜாதி தர்மாவோ | எப்.வீ.பி. 3201 இல் துண்டு பிரிக்கும் வரைபடம் 98/332 | N | 23.32 பேர்ச்சஸ் | காணித் துண்டு இல. M | நீர்ப்பாசனத் திணைக்களத் தின் காணி | உள்ளிடும் பாதை | காணித் துண்டு இல. O |
| 15 | 4/10/57547 | திரு. ஹிடிஹாமி முதியன்சேலாகே சமன் பிரசன்ன சோமரத்ன | எப்.வீ.பி. 3201 இல் துண்டு பிரிக்கும் வரைபடம் 98/332 | L | 20.16 பேர்ச்சஸ் | உள்ளிடும் பாதை | காணித் துண்டு இல. M | காணித் துண்டு இல. O | காணித் துண்டு இல. K |
| 16 | 4/10/57557 | திரு. ஜயகொடி ஆராச்சிகே விஜேதாச | எப்.வீ.பி. 3201 இல் துண்டு பிரிக்கும் வரைபடம் 98/332 | W | 20.16 பேர்ச்சஸ் | காணித் துண்டு இல. T | காணித் துண்டு இல. V | உள்ளிடும் பாதை | காணித் துண்டு இல. X |

| தொடர் இல. | காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம் | கோவையில் உள்ள பெயர் | வரைபட/ சுவடு வரைபட இலக்கம் | காணித் துண்டு இல. | காணியின் பரப்பளவு | எல்லைகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | 4/10/57555 | திருமதி கலப்பத்தி மெரென்சிகே சஸ்திரலதா த சில்வா | எப்.வீ.பி. 3201 இல் துண்டு பிரிக்கும் வரைபடம் 98/332 | B | 20.16 பேர்ச்சஸ் | குளக்கரை | காணித் துண்டு இல. C | காணித் துண்டு இல. J | பாதை |
| 18 | 4/10/57537 | திரு. ஹிட்டிஹாமி முதியன்சேலாகே ஜயந்த குணதிலக | எப்.வீ.பி. 3201 இல் துண்டு பிரிக்கும் வரைபடம் 98/332 | D1 | 22.93 பேர்ச்சஸ் | காணித் துண்டு இல. C1 | நீர்ப்பாசனத் திணைக்களம் ஆட்சி செய்யும் காணி | உள்ளிடும் பாதை | காணித் துண்டு இல. E1 |

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை இந்த வர்த்தமானி அறிவித்தல் பிரசுரமான திகதியிலிருந்து 6 வாரங்களுக்குள் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்காவிட்டால், விண்ணப்பங்களுக்கு அமைவாகக் குத்தகை வழங்கப்படும்.

டபிள்யூ. கே. என். நயோமி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, ஒற்றோபர் 09.

10-387

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/62026.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : EP/28/LB/LS/BAT/KP/25.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டம், கோரளைப்பற்று-வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 204-கல்குடா கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பாசிக்குடா எனும் கிராமத்தில் எப்வீபி.மட 1179 ஆம் இலக்க பருமட்டான வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 101, 105, 106, 107 அமைந்துள்ளதும் 0.1986 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக பாசி பே ஹோட்டல் தனியார் நிறுவனம் குத்தகைக்குத் தருமாறு கேட்டு விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

1. காணித்துண்டு இலக்கம் 101

வடக்கு : பாதை ;
கிழக்கு : பாதை ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 102 ;
மேற்கு : காணித்துண்டு 100 மற்றும் 103.

1. காணித்துண்டு இலக்கம் 105, 106 மற்றும் 107

வடக்கு : 102 ;
கிழக்கு : பாதை ;
தெற்கு : பாதை ;
மேற்கு : பாதை மற்றும் காணித்துண்டு இலக்கம் 104.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்டும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்டும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2020.08.02 ஆந் திகதியிலிருந்து 2050.08.01 ஆந் திகதி வரை முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2020 ஆம் ஆண்டு காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ரூபா ஐந்து மில்லியனை விட (ரூபா 5,000,000.00) குறையும் சந்தர்ப்பங்களில் பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்துக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தும் வருடத்தின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை விட (ரூபா 5,000,000.00) தாண்டும் சந்தர்ப்பத்தில் பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒரு முறை திருத்தப்பட வேண்டும் என்பதுடன் அதன் முந்தைய ஐந்து வருடத்தின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்திற்கு 20% சேர்க்கப்பட வேண்டும்.

*தவணைப்பணம்*.- அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(ஈ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்டும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஊ) 2020.08.02 ஆந் திகதியிலிருந்து 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவு செய்வதற்கான உப குத்தகை அல்லது கைமாற்றம், விரிந்த உப குத்தகை பெறும் கைமாற்றம் அனுமதிக்கப்பட மாட்டாது ;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இவ் அறிவித்தல் வெளியிடப்பட்டு 6 வாரங்களுக்குள் குறித்த காணியை குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணத்தினை எழுத்து மூலம் எனக்கு முன்வைக்கப்படாதவிடத்து விண்ணப்பத்தின்படி குத்தகை வழங்கப்படும்.

ஜீ. பிரணவன்,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, ஒற்றோபர் 09.

10-332

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/59586.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : NP/28/04/02/SL/41(Pillaiyar Temple-205).

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்டம், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெற்றிலைக்கேணி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வெற்றிலைக்கேணி எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் சுமாரான சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சுமார் 02 ஏக்கர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை கோயில் கட்டிடம் அமைக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு அருள்மிகு தோட்டத்துப் பிள்ளையார் கோயில் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : அரச காணி ;
கிழக்கு : அரச காணி, பாதை ;
தெற்கு : பாதை, அரச காணி ;
மேற்கு : அரச காணி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்டும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்டும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சர் குத்தகைக்கு வழங்க அனுமதித்த 2020.07.15 ஆந் திகதி தொடக்கம் 2050.07.14 ஆந் திகதி வரையிலும்) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2020 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 1/ 2% வருடாந்தக் குத்தகை கொடுக்கப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி கோயில் கட்டடம் அமைக்கும் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத் திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது.

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்.

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2020.07.15 ஆந் திகதியிலிருந்து 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க் குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்பட மாட்டாது.

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரித்த தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ஆர். டி. உமேஷா மதுவன்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, ஒற்றோபர் 09.

10-389

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/34277.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : NP/28/04/02/01/365.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

வவுனியா மாவட்டம், வவுனியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 244, ஆசிக்குளம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சிதம்பரம் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் டோபோ பிபி 55 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 938 எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.836 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை கல்வி நடவடிக்கை நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு கொழும்பு பைபின் வித்தியாலயம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 940, பாதை ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 940 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 939 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 939, 940 பாதை.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சர் குத்தகைக்கு வழங்க அனுமதித்த 2020.07.15 ஆந் திகதி தொடக்கம் 2050.07.14 ஆந் திகதி வரையிலும்) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2020 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 1/ 2% வருடாந்தக் குத்தகை கொடுக்கப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி கல்வி நடவடிக்கை நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது.

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்.

(ஊ) பிரதேச செயலாளர், மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைக்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) 2020.07.15 ஆந் திகதியிலிருந்து 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்பட மாட்டாது.

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரித்த தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ஏ. எச். எம். பி. டி. அபேசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, ஒற்றோபர் 09.

10-388

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/57022.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : NP/28/04/02/SLO/45/1445.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டம், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பரந்தன் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பரந்தன் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் ஜஎஸ்பிபி-4 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 2றூட் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வழிபாட்டு நோக்கத்திற்காக இலங்கை சின்மயா மிஷன் நம்பிக்கைச் சபைக்கு குத்தகைக்குத் தருமாறு விண்ணப்பித்துள்ளமை இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 134 ;
கிழக்கு : A9 வீதி ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 136 ;
மேற்கு : புகையிரத வீதி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சர் குத்தகைக்கு வழங்க அனுமதித்த 2020.08.02 ஆந் திகதி தொடக்கம் 2050.08.01 ஆந் திகதி வரையிலும்) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகைப் பணம்**.- காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 0.5% செலுத்தப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி வழிபாடு நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது.

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்.

(ஊ) பிரதேச செயலாளர், மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) 2020.08.02 ஆந் திகதியிலிருந்து 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க் குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்பட மாட்டாது.

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ஜீ. பிரணவன்,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, ஒற்றோபர் 09.

10-330

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/63194.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : NCP/PLC/L7/10/4/2.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

வட மத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், பலாகல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 276, கீரிக்குளம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கீரிக்குளம் எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடஸ்திரல் வரைபட இலக்கம் 110191 வலயம் 10 காணித்துண்டு இல. 01 இன் ஒரு பகுதிக்குள் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டயார் 0.7114 விஸ்தீரணமுள்ளதுமான அரச காணித்துண்டை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு ரணந்த மன்யுபெக்சர்ஸ் பிறைவட் லிமிட்டட் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : பாதைக்கான ஒதுக்கு ;
கிழக்கு : டபிள்யூ. செனவிரத்ன என்பவரின் காணி மற்றும் காணித்துண்டு இலக்கங்கள் 7, 8 மற்றும் 9 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 3, 13, 12 மற்றும் 9 ;
மேற்கு : பாதைக்கான ஒதுக்கு மற்றும் டபிள்யூ. பெரேரா என்பவரின் காணி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2020.07.22 ஆந் திகதியிலிருந்து முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2020 ஆம் ஆண்டு காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விட (ரூபா 5,000,000.00) குறையும் சந்தர்ப்பங்களில், பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்துக்கான காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தும் வருடத்தின் காணியின் 2020 ஆம் ஆண்டின் விலைமதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விட (ரூபா 5,000,000.00) அதிகமாகும் சந்தர்ப்பத்தில் பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான காணியின் சந்தைப் பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுக்கப்பட வேண்டும். இக்குத்தகைப் பணமானது ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒரு முறை திருத்தப்பட வேண்டும் என்பதுடன் அதன் முந்தைய ஐந்து வருடத்தின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்திற்கு 20% சேர்க்கப்பட வேண்டும்.

தவணைப்பணம்.- அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(ஈ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஊ) 2020.07.22 ஆந் திகதியிலிருந்து 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க் குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்பட மாட்டாது ;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரித்த தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டபிள்யூ. எம். எஸ். ஜீ. கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர் (காணி),
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, ஒற்றோபர் 09.

10-331